1974 ஏப்ரல் 2]

கொல்லிமலையில் புதிய பள்ளி

***705 வினா—திரு. சி. சின்னவெள்ளையன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் பையில்நாடு என்ற இடத்தில் நடுநிலைப்பள்ளி (8-ஆம் வகுப்புவரை) துவங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சேந்தமங்கலம் தொகுதி, கொல்லி மலையில், பையில்நாடு என்ற இடத்தில் நடு நிலைப்பள்ளி துவங்கும் செயற்குறிப்பு ஏதும் கல்வித்துறையில் இல்லை. ஆனால் உயர்நிலைப்பள்ளி துவக்கும் திட்டம் ஒன்று அரி சன நலத்துறையின் பரிசீலனையில் உள்ளது.

கோவளம் கடற்கரை

***706 வினா—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள கோவளம் கடற்கரையினை சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேம்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆம். மாமல்ல புரத்தை அனைத்து நாட்டுக் கடற்கரை விழைவிடமாக (International Beach Resort) மேம்படுத்துவதற்குரிய செயல் திட்ட அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காக, இந்திய அரசு ஆதரவில் ஐக்கியநாடுகள் வளர்ச்சித் திட்டக் குழுக்கள் இரண்டு, சென்னைக்கும், மாமல்லபுரத்திற்கும் இடைப்பட்ட கடற்கரையை இவர்கள் பார்வையிட்டனர். ஐக்கியநாடுகள் வளர்ச்சித்திட்டக் குழுக்கள் இரண்டு, சென்னைக்கும், மாமல்லபுரத்திற்கும் இடைப் பட்ட கடற்கரையைப் பார்வையிட்டனர். குறிப்பாக முட்டுக்காடு. கோவளக் கடற்கரையை இவர்கள் பார்வையிட்டனர். ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டக் குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படு கிறது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, கோவளத்தை மேம்படுத்தும் திட்டத்தில் என்னமாதிரியான காரியங்களெல்லாம் செய்தால் சுற்றுலா வருகிறவர்களைக் கவரக்கூடும் என்று

ஏதாவது பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறதா? என்ன என்ன கவர்ச்சிமிக்க காரியங்களைச் செய்வதாக அரசாங்கத்திற்கு அபிப் பிராயம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்திய அரசு ஆதரவில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டக் குழுக்கள் இரண்டு இங்கே வருகை தந்தன. 1972 நவம்பர்-டிசம்பர் திங்களில் அவைகள் பார்வையிட்டன. அவைகள் பார்வையிட்ட பிறகு, எந்த எந்த வகையில் மேம்படுத்தலாம் என்ற திட்டத்தை வகுத்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக் கிறார்கள். அது மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து வரு கிறது. மத்திய அரசிடமிருந்து அந்த அறிக்கையை நாங்கள் விரைவில் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர்கள் குறிப் பாக பூஞ்சேரி-கோவளம் சாலைச் சந்திப்புக்கும் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கும் இடைப்பட்ட பகுதி, குறைந்த, நடுத்தர வருமானப்பகுதியினருக்குச் சுற்றுலா இட வசதி பகுதியாக அமையலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கிழக்குக் கடற்கரை-கோவளம் சாலைக்கும் கடலுக்கும் இடை யுள்ள பகுதி பரந்த மணற்பரப்பாகும். மாமல்லபுரத்திலுள்ள பஞ்ச ரதங்களிலிருந்து கோவளம் வரை, கடற்கரைப் பகுதியில், தென்னை, வேப்ப மரங்கள், வெள்ளை அரளி முதலிய மரங்களை நட்டு மேம்படுத்தலாம். கடற்கரை நெடுகிலும் பசுமையான மரஞ்செடி கொடிகளிலிருந்தால், சுற்றுலாப் பயணிகளுக்கு வெப்பத்தினின்றும் பாதுகாப்பு கிடைக்கும். மணலிலிருந்தும் கடலிலிருந்தும் வரும் தூசினை ஈர்த்துக் கொண்டு கடற்கரையில் பயணிகள் தங்க நிழல் கிடைக்கும். புலிக் குகையிலிருந்து கோவளம் வரையுள்ள பகுதி அழகுமிக்க கடற்கரையாகும். இங்கு சாலை நெடுகிலும் முகாமிடுவதற்கு ஏற்ற இடமாகக் கருதலாம். இப்படி மேலெழுந்தவாரியாகக் கருத்துக்கள் தெரிவித்திருக் கிறார்கள்.

ஆனால், திட்டவட்டமான அறிக்கை மத்திய சர்க்காருக்கு அளித்திருக்கிறார்கள். அங்கிருந்து அதை நாம் எதிர்பார்க் கிறோம். மத்திய அரசின் சுற்றுலாத் துறை அமைச்சரகத் திலிருந்து விரைவில் அந்த அறிக்கை அனுப்பிவைக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டிருக்கிறேன்.

1974 ஏப்ரல் 2]

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, சென்னைக்கும் மாமல்லபுரத்திற்கும் இடையில் கோவளம் கடற்கரை நல்ல வளைவாகவும், அலை வேகமில்லாமலும், மணற்பாங்காகவும், வெளிநாட்டவர்களும் உள்நாட்டவர்களும் குளிக்க நல்ல வசதியாகவும் இருக்கிறது. ஆகவே, அந்த இடத்தை நல்ல முறையில் அபிவிருத்தி செய்து சுற்றுப் பயணிகளுக்கு வசதிசெய்துகொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஐக்கிய நாடுகள் திட்டக் குழு இந்தப் பகுதிகளை மிகத் தீவிரமாக ஆராய்ந்து இருக்கிறார்கள். அந்தப் பகுதியை வளப்படுத்தலாம் என்று குறிப்பாகக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அறிக்கை வந்த பிறகு அதன் அடிப்படையில் காரியங்கள் துவக்கப்படுவதற்கு மத்திய அரசின் உதவி கோரப்படும். மாநில அரசும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும்.

பூமிதான இயக்கம்

* 691 வினா—**திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் இதுவரை பூமிதான இயக்கத்தின் மூலம் கிடைத்துள்ள நிலத்தின் விஸ்தீரணம் என்ன, மாவட்டவாரியாக ?

(இ) அது எப்படி விநியோகம் செய்யப்பட்டது ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :

(அ)	1. செங்கற்பட்டு	1,660	ஏக்கர்கள்.
	2. தென் ஆர்க்காடு	1,528	”
	3. வட ஆர்க்காடு	395	”
	4. தஞ்சாவூர்	874	”
	5. திருச்சிராப்பள்ளி	2,254	”
	6. சேலம் & தர்மபுரி	1,902	”